தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**நிரம்பிய அணையால் விவசாயிகள் மகிழ்ச்சி**

மழையால் நிரம்பிய சோலையாறு அணை மூலமாக கீழ்பகுதி விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர். வால்பாறையில் பெய்துவரும் பருவ மழையால் கடந்த வெள்ளிக்கிழமை முழு கொள்ளளவான 160 அடியை சோலையாறு அணை எட்டியது. நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்ததால் முழு கொள்ளளவுக்கு மேல் 164.52 அடியை செவ்வாய்க்கிழமை விடியற்காலை எட்டியது. இதனால், அணையின் பாதுகாப்புக் கருதி மதகு திறக்கப்பட்டு உபரி நீர் வெளியேற்றப்பட்டது. புதன்கிழமை காலை நிலவரப்படி அணைக்கு விநாடிக்கு 6,731.60 கன அடி தண்ணீர் வந்தது. அணையில் இருந்து இரண்டு மின் நிலையங்களுக்கும் மொத்தமாக 1015.39 கன அடியும், ஷேடல்டேம் வழியாக பரம்பிக்குளத்துக்கு 5,647.11 கன அடியும், மதகு வழியாக உபரி நீர் 427.55 கன அடியும் வெளியேறியது. ஷேடல்டேம் வழியாக பரம்பிக்குளக்கிற்கு வெளியேற்றப்படும் தண்ணீர் மூலமாக கீழ்பகுதி விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர்.

**<u>தமிழகத்தை வறட்சி மாநிலமாக அறிவிக்க வேண்டும்: கருணாநிதி கோரிக்கை</u>**

தமிழகத்தை வறட்சி மாநிலமாக அறிவித்து விவசாயிகளுக்கு மத்திய அரசு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என திமுக தலைவர் கருணாநிதி அறிவித்தார்.

இதுகுறித்து புதன்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை:

தமிழகத்தை வறட்சி மாநிலமாக அறிவிக்க வேண்டும் என்று மாநிலங்களவையில் திமுக உறுப்பினர் கனிமொழி கோரிக்கை விடுத்துள்ளார். வேளாண் உற்பத்திக் குறைவு, கடும் குடிநீர்ப் பற்றாக்குறை, தீவனப் பற்றாக்குறை என தமிழகம் முழுவதும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த 3 ஆண்டுகளில் சராசரியாகப் பெய்யக் கூடிய மழை இல்லை. நிலத்தடி நீர் மட்டம் வரலாறு காணாத அளவு குறைந்துவிட்டது. கடந்த 2013-ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவ மழையும், தென்மேற்குப் பருவ மழையும் பொய்த்துவிட்டன. கடந்த 3 ஆண்டுகளாக தமிழகத்தில் குறுவை சாகுபடி அறவே நடைபெறவில்லை. ஆகஸ்ட் மாதம் பிறந்த பிறகும் மேட்டூர் அணை திறக்கப்படவில்லை. விவசாயிகள் பயிர்க்கடனை

திரும்பச் செலுத்த முடியாமலும், மேலும் கடன் பெற முடியாமலும் சிரமப் படுகிறார்கள். இந்தப் பிரச்னைக்காக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் கோரிக்கை வைத்துள்ளன. எனவே, தமிழகத்தை வறட்சி மாநிலமாக அறிவித்து, விவசாயிகளுக்கு உடனடியாக உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.

## 100 அடியை நெருங்குகிறது அடவிநயினார் அணை

மேற்குத் தொடர்ச்சி மலையில் பெய்து வரும் மிதமான மழையால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது. 132 அடி கொள்ளளவு கொண்ட அடவிநயினார் அணையின் நீர்மட்டம் 100 அடியை நெருங்கிறது. மேற்குத் தொடர்ச்சி மலையில் அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் மிதமான மழை பெய்து வருகிறது. புதன்கிழமை காலை நிலவரப்படி கடனாநதி அணையில் 1 மிமீ, குண்டாறு அணையில் 13 மிமீ, அடவிநயினார் அணையில் 3 மிமீ மழை பதிவானது. புதன்கிழமை நிலவரப்படி பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 1,990.86 கன அடி, சேர்வலாறு அணைக்கு 1,500 கன அடி, மணிமுத்தாறு அணைக்கு 8 கன அடி, கடனாநதி அணைக்கு 192.16 கன அடி, ராமநதி அணைக்கு 72.98 கன அடி, அடவிநயினார் அணைக்கு 46 கன அடி, கருப்பாநதி, குண்டாறு அணைகளுக்கு தலா 10 கன அடி நீர்வரத்து இருந்தது. பாபநாசம் அணை நீர்மட்டம் 2 அடி உயர்ந்து 65.40 அடியாகவும், சேர்வலாறு அணை நீர்மட்டம் 2.50 அடி உயர்ந்து 80.54 அடியாகவும், மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 55.21 அடியாகவும் இருந்தது. 132 அடி கொள்ளளவு கொண்ட அடவிநயினார் அணை நீர்மட்டம் 1.50 அடி உயர்ந்து 98 அடியாக இருந்தது. மிதமான மழையால் அணை நீர்மட்டம் ஒரு வாரத்தில் 13 அடி உயர்ந்துள்ளது. தொடர்ந்து நீர்வரத்து இருப்பதால் நீர்மட்டம் 100 அடியை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## அமராவதி அணையில் இருந்து இன்று முதல் தண்ணீர் திறப்பு: முதல்வர் உத்தரவு

திருப்பூர் மாவட்டம், அமராவதி அணையில் இருந்து வியாழக்கிழமை முதல் தண்ணீர் திறந்து விட முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். இதுகுறித்து புதன்கிழமை அவர் வெளியிட்ட அறிவிப்பு: உடுமலை வட்டத்தில் உள்ள அமராவதி அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடக் கோரி அமராவதி பழைய ஆயக்கட்டு பாசன விவசாயிகள் சங்கத்தினர் உள்ளிட்ட திருப்பூர் மாவட்ட

விவசாயிகளிடம் இருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. இதனை ஏற்று, திருப்பூர் மாவட்டத்திலுள்ள 8 பழைய பாசன வாய்க்கால்களின் மூலம் குறுவைப் பாசனத்துக்காக அமராவதி அணையில் இருந்து வியாழக்கிமை முதல் தண்ணீர் திறந்து விட உத்தரவிடப்பட்டுள்ளது. இதன் மூலம், திருப்பூர் மாவட்டத்திலுள்ள 7 ஆயிரத்து 520 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்று முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

## <u>பவானிசாகர் அணை நீர்மட்டம் 73.71 அடி</u>

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் புதன்கிழமை நிலவரப்படி 73.71 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 5,752 கன அடி தண்ணீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 1,400 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 12.58 டி.எம்.சி.

## <u>எருமாடு பகுதி விவசாயிகளுக்கு காளான் வளர்ப்பு பயிற்சி</u>

பந்தலூரை அடுத்துள்ள எருமாடு பகுதியில் சிப்பிக் காளான் வளர்ப்பு குறித்த செயல் முறை விளக்கப் பயிற்சி புதன்கிழமை நடைபெற்றது. தோட்டக் கலை மற்றும் வேளாண்மை தொழில்நுட்ப முகமை சார்பில் நடைபெற்ற இப்பயிற்சி முகாமிற்கு தோட்டக்கலைத் துறை உதவி அலுவலர் வினோத் தலைமை வகித்தார். சரவணன், ஒருங்கிணைப்பாளர் விஜயகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பயிற்சியாளர்கள் ஜெயப்பிரியா, சத்யா, பானுப்பிரியா ஆகியோர் பயிற்சி அளித்தனர். இதில், எருமாடு பகுதியிலுள்ள சிறு விவசாயிகள், மகளிர் குழுவினர் பங்கேற்றனர்.

## <u>60% மானியத்தில் சிறுதானிய பயிர்கள்:வேளாண் அதிகாரி தகவல்</u>

செய்யாறு வட்டாரத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு 60 சதவீத மானியத்தில் சிறுதானிய பயிர்கள் வழங்கப்படுகின்றன என வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி கூறினார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: கோடை உழவுக்குத் தேவையான அளவில் தற்போது மழை பெய்துள்ளது. எனவே,ஸ செய்யாறு வேளாண்மை விரிவாக்க மையத்தில் நெல் ரகங்களான எடிடீ 45,எடிடீ 43, எடிடீ37 ஆகியன விதை கிராமத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது. எண்ணெய் வித்துப் பயிர்களான மணிலாவில்

கே 6 இரகம் மற்றும் சிறுதானியப் பயிர்களான கம்பு, கேழ்வரகு, மக்காச்சேளம் ஆகியன 60 சதவீதம் மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. மண் வளத்தைப் பாதுகாக்கும் வகையில் மண் ஆய்வு செய்து பரிந்துரைக்கப்பட்ட உரத்தை இட்டு மண் வளத்தை பாதுகாத்திட வேண்டும். விதைகளை உயிர் உரம் கொண்டு விதை நேர்த்தி செய்து தரிசு நிலத்தில் உளுந்து மற்றும் சிறு தானியப் பயிர்களை சாகுபடி செய்து விவசாயிகள் பயன் அடையலாம் என்றார் சாந்தி.

**<u>இலவச கறவை மாடுகளின் பால் உற்பத்தி: ஆவின் நிறுவனத்துக்குப் பெற ஆட்சியர் உத்தரவு</u>**

திருவண்ணாமலை மாவட்டத்தில் தமிழக அரசு சார்பில் வழங்கப்பட்ட இலவச கறவை மாடுகள் மூலம் கிடைக்கும் பால் முழுவதையும் ஆவின் நிறுவத்துக்குப் பெற உரிய நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன் உத்தரவிட்டுள்ளார். திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இலவச கறவை மாடுகள் மூலம் உற்பத்தியாகும் பால் முழுவதையும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் ஆவின் நிறுவனத்துக்குப் பெறுவது தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் பேசிய ஆட்சியர் அ.ஞானசேகரன், 2011 முதல் திருவண்ணாமலை மாவட்டத்தில் ஆண்டுக்கு தலா 700 இலவச மாடுகள் வீதம் இதுவரை 2100 இலவச கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த மாடுகளில் இருந்து தினசரி உற்பத்தியாகும் சராசரி 5,297 லிட்டர் பால் 38 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு ஆவின் நிறுவனத்துக்கு அனுப்பப்பட்டு வருகிறது. இருப்பினும், சில கூட்டுறவு சங்கங்களில் இருந்து ஆவின் நிறுவனத்துக்கு பால் அனுப்பப்படவில்லை. எனவே, தமிழக அரசு மூலம் இலவச கறவை மாடுகள் பெற்று தனியாருக்கு பால் வழங்கும் பயனாளிகளை நேரில் தொடர்பு கொண்டு உற்பத்தி செய்யப்படும் பால் முழுவதையும் ஆவின் நிறுவனத்துக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆவின் அதிகாரிகளுக்கு ஆட்சியர் அ.ஞானசேகரன் உத்தரவிட்டார். இக் கூட்டத்தில், கால்நடைத் துறை மண்டல இணை இயக்குநர் சி.ஏ.செல்வராஜி, துணைப் பதிவாளர் இரா.முனிராஜ், துணை இயக்குநர்கள் பி.செல்வன், கே.மணி மற்றும் கால்நடை மருத்துவர்கள், ஆவின் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

**<u>முட்டை விலை</u>**

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு புதன்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ.2.75, சென்னையில் ரூ.3.

**கறிக்கோழி விலை**

பல்லடம் பிராய்லர் ஒருங்கிணைப்புக்குழு புதன்கிழமை அறிவித்த கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.86, முட்டைக்கோழி கிலோ ரூ.57.

**<u>குறைந்த தண்ணீர் பயன்பாட்டில் லாபம் ஈட்டும் வாய்ப்பு: சூரியகாந்தி சாகுபடியில் ஆர்வம் காட்டும் விவசாயிகள்</u>**



திருச்சி மாவட்டம், இனாம் புலியூர் பகுதியில் விவசாயி ஒருவரது நிலத்தில் பயிரிட்டுள்ள சூரியகாந்தி.

தொடரும் வறட்சி, குறைந்து வரும் நிலத்தடி நீர்மட்டம் போன்றவற்றால் பாதிக்கப்பட்டு வரும் நிலையில், குறைந்தளவு நீரைக் கொண்டு லாபம் ஈட்டக்கூடிய சூரியகாந்தி சாகுபடி செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர் திருச்சி மாவட்ட விவசாயிகள். திருச்சி மாவட்டத்தில் தொட்டியம், தாத்தையங்கார் பேட்டை, மண்ணச்சநல்லூர் ஒன்றியப் பகுதிகள், ஸ்ரீரங்கம் வட்டத்திலுள்ள இனாம்புலியூர், சிறுகமணி, பெருகமணி, முதலைப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் ஏறத்தாழ 750 முதல் 1000 ஏக்கர் பரப்பளவில் சூரியகாந்தி பயிரிடப்படும். ஆற்று, வாய்க்கால் பாசனத்தை நம்பியிருக்காமல், ஆழ்துளைக் கிணறுகளின் மூலமாகக் கிடைக்கும் தண்ணீரைக் கொண்டு சூரியகாந்தி சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். குறைவான செலவில் வருவாய்: மற்றப் பயிர்கள் போல

இல்லாமல் 90 முதல் 100 நாள்களில் சூரியகாந்தி சாகுபடி செய்யலாம். தினந்தோறும் பயிருக்குத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. 10 நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் பாய்ச்சினாலே போதும். ஏக்கருக்கு 1 கிலோ வீதம், 2 ஏக்கருக்கு ரூ.1000-ல் விதை, நடவுக்கூலி, உழவு கூலி, உரம் என எல்லா செலவுகளும் ரூ.5000-க்குள் அடங்கிவிடும். நோய் பாதிப்பு இல்லாமல் கண்காணித்து வந்தால் ஏக்கருக்கு 1000 கிலோ முதல் 1500 கிலோ வரை விளைச்சல் இருக்கும். நோய் பாதிப்பு இல்லாத நிலையில் விளைச்சல் அதிகமிருந்து சூரியகாந்தி சாகுபடி செய்தால் ஏக்கருக்கு ரூ. 20,000 வரை வருவாய் கிடைக்கும் என்கிறார் புலியூர் விவசாயி அ.நாகராஜன். தேவையும் அதிகமிருக்கிறது: அறுவடை செய்யப்படும் சூரியகாந்தி வித்துகள் வெள்ளக்கோவில், மணப்பாறை போன்ற பகுதிகளில் விற்பனையாகிறது. முதல் தரம் 1 கிலோ ரூ.40 என்ற விலையிலும், 2-ம் தரம் ரூ.35 என்ற விலையிலும் விற்பனையாகிறது. தற்போது சூரியகாந்தி தேவை அதிகம் இருக்கிறது. ஜூன், ஜூலை மாதங்களில் சூரியகாந்தி சீசன். இந்த காலத்தில் சாகுபடி அதிகளவில் நடைபெற்றிருக்கும். ஆனால், வறட்சியின் காரணமாக தற்போதுதான் சூரியகாந்தி சாகுபடியைத் தொடங்கியிருக்கின்றனர். டிசம்பர், ஜனவரியில் சாகுபடி அதிகம் நடைபெறும் என எதிர்பார்க்கிறோம் என்கின்றனர்சூரியகாந்தி வித்துகளைக் கொள்முதல் செய்யும் வியாபாரிகள்.அரசின் உதவி தேவை: சூரியகாந்தி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு விதைக்கு மட்டும் மானியத்தை அரசு வழங்குகிறது. சாகுபடியைத் தொடர்ந்து மேற்கொள்ள மானிய உதவிகளை அதிகரித்து வழங்க வேண்டும். சில நேரங்களில் மயில் போன்ற பறவைகள் சூரியகாந்தி தோட்டத்துக்குள் புகுந்து முழுமையாக சேதப்படுத்திச் சென்றுவிடுவதால் பாதிப்பு ஏற்படுகிறது என்கின்றனர் விவசாயிகள்.

**வறட்சி: விவசாயிகளுக்கு மீண்டும் பயிர்க் கடன்**

கர்நாடகக்தில் வறட்சியால் பாதிக்த விவசாயிகள் மீண்டும் வங்கிகளில் பயிர்க் கடன் வாங்கிக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்த மாநில சட்டத் துறை அமைச்சர் டி.பி.ஜெயசந்திரா தெரிவித்தார். பெங்களூரு விதான செப்தாவில் புதன்கிழமை மாநில வங்கியாளர்கள் கூட்டத்தில் கலந்து கொண்ட பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறியது: கர்நாடகத்தில் ஒரு சில மாவட்டங்களில் கடும் வறட்சி ஏற்பட்டதால், வங்கிகளில் பெற்ற பயிர்க் கடனை திருப்பிச் செலுத்த முடியாமல் விவசாயிகள் அவதிப்பட்டு வருகின்றனர். இந்த நிலையில், அந்தக்

கடனை உடனடியாக திருப்பிச் செலுத்துமாறு விவசாயிகளை வற்புறுத்த வேண்டாம் என்று, வங்கிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில், வறட்சியால் பாதித்த ஏற்கெனவே பயிர்க் கடன் பெற்ற விசாயிகள் மீண்டும் வங்கிகளில் பயிர்க் கடன் வழங்குமாறு மாநில அரசு விடுத்த வேண்டுகோளை ஏற்று, விவசாயிகளுக்கு பயிர்க் கடனை மீண்டும் வழங்க ரிசர்வ் வங்கி ஒப்புதல் தெரிவித்துள்ளது. எனவே, விவசாயிகள் வங்கிகளில் தாராளமாக பயிர்க் கடனை பெற்றுக் கொள்ளலாம் என்றார் அவர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>94 அடியை எட்டியது மேட்டூர் அணை</u>**

சேலம் : மேட்டூர் அணையின் நீர்மட்டம் நேற்று 92 அடியாக இருந்த நிலையில், இன்று மேலும் 2 அடி உயர்ந்து 94.25 அடியை எட்டி உள்ளது. அணைக்கு வரம் நீரின் அளவு 34,084 கனஅடியில் இருந்து 22,120 கனஅடியாக குறைந்துள்ளது. அணையின் நீர்இருப்பு 57.64 டி.எம்.சி.,யாக உள்ளது. குடிநீர் தேவைக்காக அணையில் இருந்து விநாடிக்கு 800 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

**<u>புல் முளைப்பதற்காக காத்திருந்தேன்! - உவர் நிலத்தை விளை நிலமாக்கி சாதனை</u>**



மதுரை சமயநல்லூரில் இருந்து தோடனேரியை அடுத்து மூன்று கிலோமீட்டர் தொலைவில் உள்ளது மூலக்குறிச்சி. மண்ணுக்கு வெள்ளையடித்தது போல், "பளிச்'

என்று இருந்தது. விளைச்சலுக்கு உதவாது என்று "பிளாட்' ஆக மாற இருந்த நிலத்தை வாங்கி, இன்று விளைநிலமாக மாற்றிக் காட்டியுள்ளார் விவசாயி வி.சி.வெள்ளைச்சாமி. புல் கூட முளைக்காத நிலத்தில், இன்று மரங்கள் வளர்ந்து நிற்கும் அனுபவத்தை பகிர்ந்து கொண்டார். பழைய இரும்புத் தொழில் தான் என் வியாபாரம். வயது அறுபதைத் தாண்டிவிட்டது. குடும்பத்திற்கு செய்ய வேண்டிய கடமைகளை முடித்து விட்டேன். இனி மண்ணுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என நினைத்து தான் இந்த இடத்தை வாங்கினேன். நிலம் வாங்கிய போதே பள்ளமான இடத்தை ஆய்வு செய்து, அதில் மீன்வளர்க்க ஆசைப்பட்டேன். நிலத்தை வாங்கி ஆசையாய் கொய்யா, சப்போட்டா, மா மரக்கன்றுகளை நட்டேன். நட்டதோடு சரி, பாதி செத்துவிட்டது. மீதியிருப்பதும் வைத்த கடனுக்காக நின்றது. நிலம் வாங்கிய போது இங்கு புல், பூண்டு வளரவில்லை. காக்கை, குருவி கூட பறக்கவில்லை. "அகத்தி மரம் வளர்த்துப் பார்' என்றார்கள். சரியென்று அகத்தி கன்றுகளை நட்டேன். அதன் காற்றை சுவாசித்து சப்போட்டாவும், கொய்யாவும் கூடவே வளர்ந்தன. மரங்கள் மெல்ல வளர்ந்தாலும் பரவாயில்லை என, ரசாயன உரம் பக்கமே போகவில்லை. மாட்டுச்சாணமும், ஆட்டுபுழுக்கையும் தான் உரமாக தந்தேன். மெல்ல மெல்ல புற்கள் வளர்ந்தன. 20 சென்ட் பள்ளமான இடத்தில் இன்னும் சற்று ஆழம் தோண்டினேன். கடந்தாண்டு அக்டோபரில் பெய்த இரண்டு நாட்கள் மழையில், 20 சென்ட் நிலத்திலும் தண்ணீர் நிறைந்தது. கட்லா, சி.சி., மீன்களை வாங்கி விட்டேன். அவ்வப்போது பெய்யும் சிறுமழையால் இன்னமும் தண்ணீர் பாதியளவு உள்ளது. இதுவரை 100 கிலோ மீன்களை எடுத்துவிட்டேன். இன்னமும் 150 கிலோ மீன்கள் உள்ளன. சுத்தமான மழைநீரில் மீன்கள் கொழுகொழுவென்று வளர்வதைப் பார்க்கும் போது சந்தோஷமாக இருக்கிறது. மூன்றரை ஏக்கரில் சப்போட்டா, கொய்யா, நெல்லி, நாவலுக்கு சொட்டுநீர்ப் பாசனம் அமைத்துள்ளேன். பத்தடி நீள, அகல கிணற்று நீர் தான் ஆதாரம். புல்லைத் தாண்டி நெல் விளைந்தது. முதலாண்டில் ஏக்கருக்கு 5 டன், அடுத்தாண்டு 12 டன், மூன்றாமாண்டு 20 டன் எடுத்தேன். இந்தமுறை மழைஇல்லாததால்

வெறுமனே உழுது போட்டிருக்கேன். மழை பெய்தால், மண்ணாவது நல்ல உறிஞ்சும். காய்கறி, பந்தல் காய்கள் பயிரிடுவதற்காக, சொட்டுநீர்ப் பாசனம் அமைத்து தயாராக வைத்துள்ளேன். அஞ்சு ஆட்டுக்குட்டிகள் வாங்கி விட்டேன். இப்போது அஞ்சும் அடுத்த முறை குட்டிகளை உருவாக்கி விட்டது. அவற்றுக்கு தனியாக மரக்கொட்டில் அமைத்துள்ளேன். ஆட்டின் கோமியமும், புழுக்கையும் ஒன்றாக கலந்தால் நல்ல உரம் என்பதால், கொட்டிலின் கீழே சிமென்ட் சிலாப் அமைத்து, உரத்தை சேகரிக்கிறேன். மாட்டுக்கு தனியிடம் அமைத்து, மாட்டுச் சாணம் வாங்கியும் மண்புழு உரம் தயாரிக்கிறேன். என் நிலத்தில் இருந்து ஒரு சொட்டு மழைநீரை வெளியே விட மாட்டேன். அதற்கேற்ப ஆங்காங்கே வரப்பு வெட்டி மீன்குட்டையில் விழுமாறு செய்துள்ளேன். ஒற்றை ஈச்சமரத்தில் ஒரு ஜோடி சிட்டுக்குருவி கூடு கட்டியது. இப்போது 30 குருவிகள் வரை இங்கேயே சுற்றித் திரிகின்றன. நிலமென்றால் புல், பூண்டு, பாம்பு, பூச்சி, தவளை, மரம், செடி, கொடி, பறவைகளோடு மனிதர்களும் இணைந்திருக்க வேண்டும். மூன்றரை ஏக்கர் தரிசு நிலத்தை ஒருங்கிணைந்த பண்ணையமாக மாற்றி, சாதித்துவிட்டேன். சுற்றிலும் வேலியும், வேலியையொட்டி சவுக்கு கன்றுகளும் நட்டுள்ளேன். இன்னமும் ஒருஏக்கர் நிலம் தரிசாகத் தான் உள்ளது. இதை இனிமேல் தான் புல் விளை விக்க முயற்சி செய்ய வேண்டும், என்றார். அனுபவம் பேச: 9443149166. -எம்.எம்.ஜெயலெட்சுமி, மதுரை

## <u>சின்ன சின்ன செய்திகள்</u>



நெல் சாகுபடி - உயர் விளைச்சல் தரும் நெல் இரகங்கள் : குறுகிய கால இரகங்கள் (110 நாட்கள்) - ஏடிடி43, ஏடிடி45, ஏஎன்டி16 கோ51. மத்திய கால இரகங்கள் (135 நாட்கள்) ஏடிடி39, ஏடிடி 49, கோ-49, கோ-50. நெல் விளைச்சலை மேம்படுத்த

: விதைகளை உப்புநீர் கரைசலின் (18 லிட்டர் நீரில் 3 கிலோ உப்பு) மூலம் தரமான விதைகளைப் பிரித்தெடுக்க வேண்டும். நன்கு மூழ்கிய விதைகளை சுத்தமான நீரில் கழுவி பின் விதைப்புக்கு பயன்படுத்த வேண்டும். ஒரு ஏக்கருக்கு தேவையான 3 கிலோ விதையுடன் 30 கிராம் சூடோமோனாஸ் புளூரசன்ஸ், ஒரு பாக்கெட் அசோஸ்பைரில்லம் (200 கிராம்), ஒரு பாக்கெட் பாஸ்போ பாக்டீரியா (200 கிராம்) அல்லது 2 பாக்கெட் அசோபாஸ் (400 கி) உடன் கலந்து இரவு முழுவதும் ஊறவைத்து விதை நேர்த்தி செய்யவும். நடவு வயலில் ஏக்கருக்கு 8-10 கிலோ பசுந்தாள் உர விதையை விதைத்து பூப்பதற்கு முன் (40-45 நாட்களில்) மடக்கி உழவும். உழுவதற்கு முன் தொழுஉரம் அல்லது மக்கிய உரம் ஏக்கருக்கு 5 டன்கள் இட வேண்டும். ஏக்கருக்கு 200 கிலோ ஜிப்சம் மற்றும் 10 கிலோ டிஎன்ஏயு நுண்ணூட்டக் கலவை அல்லது ஜிங்க் சல்பேட் ஆகியவற்றை 20 கிலோ மணலுடன் கலந்து கடைசி உழவின்போது இடவும். ஏக்கருக்கு அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா ஒவ்வொன்றும் 4 பாக்கெட் (800 கிராம்) அல்லது அசோபாஸ் 8 பாக்கெட் (1600 கிராம்), சூடோமோனஸ் புளூரசன்ஸ் (பிஎப் 1) ஏக்கருக்கு 1 கிலோ ஆகியவற்றை 20 கிலோ மணலுடன் கலந்து நடவிற்கு முன்பு இடவும். இரசாயன உரங்கள் இடும்போது மண் பரிசோதனைப்படி தேவையான உரங்களை இட வேண்டும். குறுகிய மற்றும் மத்திய கால இரகங்களுக்கு தழை,மணி, சாம்பல் சத்துக்கள் முறையே ஏக்கருக்கு 50:20:20 கிலோவும் மற்றும் 60:20:20 கிலோ என்ற அளவில் இடவேண்டும். தழைச்சத்தை 4 சம பாகங்களாக பிரித்து அடியுரம், தூர்கட்டும் பருவம், கதிர் உருவாகும் பருவம் மற்றும் பூக்கும் பருவத்தில் இட வேண்டும். சோளத்தில் உயர் விளைச்சல் பெற - உயர் விளைச்சல் இரகங்கள் : கோ-28, கே.நெட்டை கே.8, கோ.30 வீரிய ஒட்டு இரகங்கள் : டி.என்.ஏ.யு. சோளம் வீரிய ஒட்டு கோ.5, மற்றும் பதிவு செய்யப்பட்ட வீரிய ஒட்டு இரகங்கள். இறவை மற்றும் மானாவாரி சோளத்திற்கு ஒரு ஏக்கருக்கு 4 முதல் 5 கிலோ விதை தேவைப்படும். பொட்டாசியம் டை-ஹைட்ரஜன் பாஸ்பேட் 20 கிராமுடன் ஒரு லிட்டர் நீர் கலந்த

கரைசலில் விதைகளை 6 மணி நேரம் ஊறவைத்து நிழலில் உலர்த்திய பின் விதைப்பதால் பயர் வறட்சியைத் தாங்கி வளரும். இறவைப் பயிருக்கு தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக்கள் முறையே 36:18:18 கிலோவும், மானாவாரி பயிருக்கு தழை மற்றும் மணிச்சத்துக்கள் 16:8 மற்றும் நுண்ணூட்டக் கலவை ஏக்கருக்கு 5 கிலோ என்ற அளவில் இடவேண்டும். கம்பில் உயர் விளைச்சல் பெற : ஒட்டு இரகம் கோ.9 மற்றும் ஐசிஎம்வி 221. இறவைப்பயிருக்கு ஒரு ஏக்கருக்கு 2 கிலோ விதை, தகுந்த இடைவெளி (45x15 செ.மீ) பின்பற்றி சரியான பயிர் எண்ணிக்கையை பராமரிக்க வேண்டும். மானாவாரி விதைப்புக்கு கம்பு விதைகளை கடினப்படுத்த 2 சதம் பொட்டாசியம் குளோரைடு அல்லது 3 சதம் சோடியம் குளோரைடு கரைசலில் 16 மணி நேரம் ஊறவைத்து பின்பு 5 மணி நேரம் நிழலில் உலர வைத்து பின்பு விதைக்க வேண்டும். நுண்ணூட்டசத்து கலவை ஏக்கருக்கு 5 கிலோ வீதம் இட வேண்டும். வீரிய ஒட்டு இரகங்களுக்கு ஏக்கருக்கு 32:16:16 கிலோ தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக்களை இடவேண்டும். இரகங்களுக்கு ஏக்கருக்கு 28:14:14 கிலோ தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக்களை இடவேண்டும். - டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்

## <u>தேன் - சிறந்த மருந்து</u>



ஒவ்வொரு மனிதனுக்குள் தேவையான சக்தியை நாம் உண்ணும் உணவில் உள்ள சர்க்கரைப் பொருட்களில் இருந்து கிடைக்கிறது. தேன் மனிதனுக்கு சர்க்கரையையும், சக்தியையும் தருகிறது. தேன் உணவு மட்டுமல்ல, இயற்கை கொடுத்த மருந்துப் பொருள் ஆகும். ஆயுர்வேத/யுனானி மருத்துவத்தில் தேன் முக்கியப் பங்கு வகிக்கிறது. கல்லீரல் நோய்களுக்கு மருந்தாகவும், நல்ல மலமிளக்கியாகவும் பயன்படும் தேன் இதய நோயைத் தீர்க்கும் மருந்தாகும். தீக்காயம், வெட்டுக்காயம் ஆகியவற்றை ஆற்ற தேன் பயன்படுகிறது. தேனில் உள்ள குளுக்கோஸ் சத்து இரத்த நாளங்களை சீராக விரிவடையச் செய்து இரத்த ஓட்டத்தைச் சீராக்கும். பல்வேறு விதமான கண் நோய்களுக்குத் தேனை விட சிறந்த மருந்து இல்லை. கர்ப்பிணிப் பெண்களுக்கும், குழந்தை பிறந்த பின் தாய்மார்களுக்கும் தேன் மிக நல்லது. சத்து குறைபாடு உள்ளவர்கள் தேனைப் பருகினால் நலம் பெறலாம். குழந்தைகளுக்கு ஏற்படும் டைபாயிட், நிம்மோனியா, தொண்டை அடைப்பான் மற்றும் வயிற்றுப்போக்கும் காரணமான கிருமிகளை அழிக்கும் ஆற்றல் பெற்றது. கணைச்சூடு, சொறி, பல்ஈறு வீக்கம், இருமல் போன்றவற்று மருந்தாகும். காபி, டீ, சுக்கு காபி, மூலிகை டீ போன்றவை பருகும் போது இனிப்புக்குப் பதிலாக தேனைப் பயன்படுத்தினால் உடலுக்கு மிக நன்மை பயக்கும். உலர்ந்த சருமம் உடையவர்கள் வெண்ணீரில் தேனைக் கலந்து குடித்தால் சருமத்திற்கு நல்லது. மெலிந்தவர்கள் தேனைப் பருகி வந்தால் உடல்வாகு சீராக வாய்ப்பு உள்ளது. தினமும் காலையில் தேன் சாப்பிட்டு வந்தால் தேவையற்ற கொழுப்பைக் கரைத்து விடும். பலவகை உணவுப் பலகாரங்கள் செய்ய, கசப்பு மருந்து / மூலிகை சாறுடன் கலந்து சாப்பிட பயன்படுகிறது. பலவகை நோய்களுக்குப் பயனுள்ள மருந்தாகப் பயன்படும் தேனைக் கொடுக்கும் தேனீக்களை வளர்க்கலாம். பயன் பெறலாம். இதற்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பல இடங்களில் பயிற்சி அளிக்கிறது." முழு விபரம் பெற www.tnau.org. - எம்.ஞானசேகர், தொழில் மற்றும் விவசாய ஆலோசகர், 97503 33829

## ரூ.1.16 கோடியில் ஏரிகளில் மழைநீர் சேகரிப்பு அமைப்பு

கடம்பத்துார் : கடம்பத்துாரில், கூவம் ஆற்றுப்பகுதியை ஓட்டியுள்ள ஏரிகளில், 1.16 கோடி ரூபாய் மதிப்பீட்டில், மழைநீர் சேகரிப்பு கிணறு அமைக்கப்பட்டு வருகிறது. கூவம் ஆற்றின் கரையோரம் அமைந்துள்ள ஏரிப்பகுதியில், உலக வங்கி நிதியுதவியுடன், நில நீர் உப கோட்டத்தின் கீழ், 1.16 கோடி ரூபாய் மதிப்பீட்டில், மழைநீர் சேகரிப்பு கிணறு அமைக்கும் பணி நடந்து வருகிறது. அதன்படி, கடம்பத்துார் ஒன்றிய பகுதிகளான, கடம்பத்துார், நரசிங்கபுரம், சத்தரை ஆகிய பகுதிகளில், தலா, இரண்டு இடங்களிலும், கசவநல்லாத்துாரில் ஒரு இடத்திலும் மழைநீர் சேகரிப்பு கிணறு அமைக்கும் பணி நடந்து வருகிறது. இந்த கிணறு, 30 அடி ஆழத்திலும், 13.5 அடி விட்டத்திலும் அமைக்கப்பட்டு வருகிறது. இதுகுறித்து, பொதுப்பணி துறை நில நீர் உப கோட்டத்தைச் சேர்ந்த ஒருவர் கூறுகையில், 'இவ்வாறு அமைக்கப்படும் கிணறுகளில் மழைநீர் சேமிக்கப்படுவதால், நிலத்தடி நீர் மட்டம் உயர வாய்ப்புள்ளது' என, தெரிவித்தார்.

## விலையில்லா ஆடு வழங்கல்

பாப்பிரெட்டிப்பட்டி: மூக்காரெட்டிப்பட்டியில், விலையில்லா ஆடுகள் வழங்கும் விழா, கலெக்டர் விவேகானந்தன் தலைமையில் நடந்தது. இதில், 42 பயனாளிகளுக்கு, ஐந்து லட்சத்து, 58 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான விலையில்லா ஆடுகளை, அமைச்சர் பழனியப்பன் வழங்கினார். விழாவில், பாப்பிரெட்டிப்பட்டி யூனியன் சேர்மன் முருகன், யூனியன் துணை சேர்மன் ராஜேந்திரன், யூனியன் கவுன்சிலர் இளமதிமணியரசு, மூக்காரெட்டிப்பட்டி பஞ்சாயத்து தலைவர் ரத்தினம் மாரியப்பன், கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் லோகநாதன், உதவி இயக்குனர்கள் இளங்கோவன், அர்த்தனாரி உட்பட பலர் பங்கேற்றனர்.

## விவசாயிகள் பயன்பெற கலெக்டர் அழைப்பு

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், வேளாண் பொறியியல் துறை சார்பில், ஆயிரம் ஹெக்டரில் சொட்டு நீர் பாசனம் மற்றும் தெளிப்பு நீர் பாசனம் ஆகிய பணிகள் மேற்கொள்ள உள்ளதால் விவசாயிகள் விண்ணப்பித்து பயன் பெறலாம்.

இதுகுறித்து, கலெக்டர் ராஜேஸ் வெளியிட்ட செய்திக்குறிப்பு: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வேளாண்மை பொறியியல் துறை மூலம், 2014-15ம் நிதியாண்டில், நீர் வள நிலவள திட்டத்தின் கீழ் சொட்டு நீர் பாசனம் மற்றும் தெளிப்பு நீர் பாசனம் ஆகிய பணிகள் ஆயிரம் ஹெக்டர் பரப்பில் அமைக்க ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தில், சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர் பாசனம் அமைக்க சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு, 100 சதவீத மானியமும், இதர விவசாயிகளுக்கு, 75 சதவீத மானியமும் வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தில், பயன் அடைய விரும்பும் விவசாயிகள் பெயர் மற்றும் முகவரி, சர்வே எண், சிட்டா, அடங்கல் ஆகியவற்றுடன் விண்ணப்பங்களை வழங்க வேண்டும். விண்ணப்பங்களை, "உதவி செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை, ராயக்கோட்டை ரோடு, சென்னசந்திரன், ஓசூர்', என்ற முகவரியிலும், "உதவி செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை, 43, செட்டியம்பட்டி ரோடு அம்பேத்கார் நகர், கிருஷ்ணகிரி' என்ற முகவரியிலும் பெற்று பூர்த்தி செய்து வழங்க வேண்டும். கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் விண்ணப்பித்து திட்டத்தின் கீழ் பயன்பெறலாம். இவ்வாறு அவர் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## ஜீன்பூல் தாவர மையத்தில் விளைந்துள்ள 'இந்தியன் செர்ரி' பழங்கள்

கூடலூர் : கூடலூர் ஜீன்பூல் தாவர மையத்தில் முதன் முறையாக, 'இந்தியன் செர்ரி' மரங்களில் பழங்கள் விளைந்துள்ளன. நீலகிரி மாவட்டம், கூடலூர் நாடுகாணி ஜீன்பூல் தாவர மையத்தில், அரிய மற்றும் அழிவின் பிடியில் உள்ள தாவரங்கள், மருத்துவ குணம் நிறைந்த தாவரங்கள், அதன் குடும்பங்கள் வாரியாக வளர்க்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன.இந்த மையம் 'தாவர ஆராய்ச்சி' மாணவர்களுக்கு பயனுள்ளதாக அமைந்துள்ளன. இங்கு வெப்ப மண்டல பகுதிகளில் மட்டுமே காணப்படும், இந்தியன் செர்ரி மரங்கள் வளர்க்கப்பட்டன. அதில், தற்போது பழங்கள் விளைந்துள்ளன. இதனால், இங்குள்ள ஆய்வாளர்கள்

மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இது குறித்து ஜீன்பூல் வனச் சரகர் ராமச்சந்திரன் (பொ) கூறுகையில், "இங்கு தற்போது விளைந்துள்ள, இந்தியன் செர்ரி பழங்கள் நோய் எதிர்ப்பு சக்தி அதிகம் உள்ள பழமாகும். இவை, நீலகிரி மாவட்டத்தில் இங்கு மட்டுமே உள்ளது. இதன் மருத்துவ குணங்கள் குறித்து மேலும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ள திட்டம் உள்ளது. பொதுமக்கள், தாவரவியல் மாணவர்கள் இந்த பழங்களை கண்டு வியந்து வருகின்றனர்," என்றார்.

## <u>காய்கறி சாகுபடியில் மகசூல் குழித்தட்டு நாற்றங்கால்</u>

குளித்தலை: காய்கறி சாகுபடி செய்யும் விவசாயிகள், காய்கறி பயிர்களில் அதிக மகசூல் பெற, குழித்தட்டு நாற்றங்கால் முறையில் நாற்றுவிட்டு நடவு செய்ய வேண்டும், தோகைமலை வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் ராஜேந்திரன், தெரிவித்தார். அவர் தெரிவித்தாவது: கரூர் மாவட்டம், தோகைமலை பகுதி விவசாயிகள் காய்கறி பயிர்களில், அதிக மகசூல் பெறுவதற்கு, வீரிய ஒட்டு ரக விதைகளை பயன்படுத்த வேண்டும். வீரிய ஒட்டு ரக விதைகளின் விலை ஒரு கிலோ, 20 ஆயிரம் ரூபாய் முதல், 60 ஆயிரம் ரூபாய் வரை விற்கப்படுகிறது. சாதாரண நாற்றங்கால் முறையில் உற்பத்தி செய்யும் போது, பயிர் செய்யும் செலவு மிக அதிகமாகிறது. விதை அளவை குறைத்து, தரமான நாற்றுக்களை உற்பத்தி செய்வதன் மூலம், விதை செலவு குறைவதுடன், அதிக மகசூலும் பெற முடியும்.

காய்கறி பயிர்களுக்கு, 0.8 மில்லி மீட்டர் தடிமன் கொண்ட, 98 குழிகள் உள்ள குழித்தட்டுகள் ஏற்றது. குழித்தட்டுக்களில், அதிகப்படியான நீர்வழிந்து செல்ல ஏதுவாக அடியில் இரண்டு துளைகள் இருக்கும். தட்டுக்களை எளிதாக மடக்கி எடுத்துச் செல்லமுடியும். குழித்தட்டு நாற்றங்கால் மூலம், காய்கறி பயிர்கள் மற்றும் அனைத்து நாற்று விட்டு நடவு செய்யும் பயிர்களையும் உற்பத்தி செய்யலாம்.

குழித்தட்டுகளில், நன்கு பதப்படுத்தப்பட்ட போதுமான தென்னை நார்க்கழிவினை நிரப்பி, 2 செ.மீ., ஆழத்தில் குழி உருவாக்கி, குழிக்கு, ஒரு விதை என்ற அளவில் இட வேண்டும். மீண்டும் நார்கழிவு மூலம் விதைகளை மூடி பின், குழித்தட்டுகளை, ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி வெளிச்சம் உட்புகாதவாறு பாலித்தீன் தாள் கொண்டு, ஐந்து நாட்களுக்கு மூடிவைக்க வேண்டும். இரண்டு நேரம், தண்ணீர் தெளிக்க வேண்டும். குழித்தட்டு முறையில் உற்பத்தி செய்த தக்காளியை, 25 முதல் 30 நாட்களிலும், மிளகாய், கத்திரி நாற்றுக்களை, 35 முதல், 40 நாட்களிலும்,

வெங்காய நாற்றுக்களை, 20 முதல், 25 நாட்களிலும் எடுத்து நடவு செய்யலாம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**<u>மரவள்ளிக் கிழங்கில் அதிக லாபம் : தோட்டக்கலைத்துறை "அட்வைஸ்'</u>**

கரூர்: மரவள்ளிக் கிழங்கு விவசாயிகள், செலவை குறைத்து அதிக லாபம் பெறுவது குறித்து, தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் அறிவுரை வழங்கி உள்ளார்.

கரூர் மாவட்டம், கடவூர் தோட்டக்கலை உதவி இயக்குனர் வீரமணி கூறியதாவது: கடவூர் பகுதியி,ல் ஒவ்வொரு ஆண்டும் மரவள்ளி பயிர் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. சந்தை விலை நிலவரத்தை பொறுத்து, சாகுபடி பரபப்பு அதிகரிக்கிறது, அல்லது குறைந்து விடுகிறது. ஆண்டுதோறும், 400 ஹெக்டேர் பரபப்பளவில் மரவள்ளி சாகுபடி நடக்கிறது. சரியான தொழில்நுட்ப முறைகளை கையாளும் போது, சாகுபடி செலவு குறைந்து, மகசூல் அதிகரிக்கும். எனவே, செலவு குறைந்த எளிய சாகுபடி தொழில்நுட்பங்களை பின்பற்றினால், தேவையில்லாத உரச் செலவு குறைவதுடன், மகசூலும் அதிகரிக்கிறது. நோய் தாக்கப்படாத, குறிப்பிட்ட தேமல் நோய் தாக்கப்படாத வயல்களிலிருந்து 15 செ.மீ., நீளமுள்ள, 8 முதல், 10 பரு கொண்ட பகுதி தண்டிலிருந்து வெட்டி சேகரிக்க வேண்டும். ஒரு லிட்டர் தண்ணீருக்கு, ஒரு கிராம் கார்பண்டாசிம் மருந்து என்ற அளவில் கலந்து கரணைகளை, 15 நிமிடம் ஊற வைக்க வேண்டும். இதனால், கரணை மூலம் பரவும் நோய்களை தடுக்க முடியும். கோ-2 ரக தட்டை பயிரை நடவு செய்து, காய்களை அறுவடை செய்த பின், செடிகளை அப்படியே மடக்கி உழவு செய்ய வேண்டும். இதனால், உழவுக்கு இட வேண்டிய குப்பையின் அளவை பாதியாக குறைத்துக் கொள்ளலாம். அடிஉரமாக, ஒரு ஹெக்டேருக்கு யூரியா, 45 கிலோ, 90 கிலோ பொட்டாஷ் என்ற அளவில், 90வது நாள் மண் அணைக்கும் போது, 45 கிலோ யூரியா, 120 கிலோ பொட்டாஷ் உரங்களை இடுவதால், உரத்தின் தேவை சிக்கனமாகவும், சீரான அளவிலும் சென்றடையும். இதற்கிடையில், இலைகளில் பச்சை நிறம் குறைந்து, வெள்ளை நிறம் அதிகரித்தால், இலை வழியாக இரும்பு சத்து, துத்தநாக சத்துக்களை அளிக்கலாம். ஒரு லிட்டர் தண்ணீரில், 10 கிராம் அன்பேதி உப்பு, 5 கிராம் துத்தநாக சல்பேட் என்ற அளவில் கலந்து இலைகளின் மேல் தெளிக்க வேண்டும். மீண்டும், 90வது நாளில், டி.ஏ.பி., உர கரைசலை

தெளிப்பதால், செடிகளின் வளர்ச்சி ஊக்குவிக்கப்படுகிறது. மேலும், சுண்ணாம்பு களர் நிலங்களில், இலைகள் தொடர்ந்து வெளுத்துக் கொண்டே இருக்கும். அப்போது, கடுமையான இரும்புச்சத்து பற்றாக்குறை காணப்படும். இதனால், கிழங்கின் எடை குறைந்து விட வாய்ப்புள்ளது. அதற்காக, ஒவ்வொரு வார இடைவெளியில், ஒரு லிட்டர் நீரில், 2.5 கிராம் பெரஸ் சல்பேட் உப்பை கரைத்து, மூன்று முதல், நான்கு முறை தெளிக்க வேண்டும். மணற்பாங்கான நிலங்களில், நீர் வற்றிவிடுகிறது. ஆனால், இறுக்கமுள்ள களிமண் பகுதிகளில், நீர் தேங்கி விடுகிறது. கிழங்கு வைக்கும் போது நீர் தேங்கினால், கிழங்கு அழுகல் நோய் உண்டாகி மகசூல் இழப்பு ஏற்படும். எனவே, இது போன்ற சமயங்களில், அளவாக நீர் பாய்ச்ச வேண்டும். பாசன நீர் உப்பாக இருந்தாலும், சொட்டுநீர் பாசனத்தால், செடிகள் பாதிப்படைவதில்லை. கிழங்கு அழுகல், வேர் அழுகல் பிரச்னை இல்லை. இதனால், கூடுதல் மகசூல் பெறலாம். சொட்டுநீர் பாசனம் அமைக்க, அரசு மானியம் வழங்குவதால், அனைத்து விவசாயிகளும் குறைந்த செலவில் பயன்பெறலாம். இவ்வாறு அவர் கூறினார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**நதிநீர் இணைப்பு திட்டத்துக்கு மாநில அரசு ஒத்துழைப்பு தேவை**

விழுப்புரம், : பாரத கிஷான் சங்கத்தின் விழுப்புரம் மாவட்ட செயற்குழுக் கூட்டம் நடந்தது. மாநில துணைத் தலைவர் ராமமூர்த்தி தலைமை தாங்கினார். மாவட்ட நிர்வாகிகள் சச்சிதானந்தன், ராஜேந்திரன், ராமமூர்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். சிறப்பு விருந்தினராக அகிலபாரத செயலாளர் மோகன் மிஸ்ராமன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். கூட்டத்திற்கு பின்னர் அவர் செய்தியாளரிடம் கூறியது: இந்தியா முழுவதும் 70 ஆயிரம் கிராமங்களில் எங்கள் அமைப்பு உள்ளது. தமிழகத்தில் உள்ள 32 மாவட்டங்களில் ஏரி, குளம், ஆறு

போன்ற நீர்நிலை பாசன வாய்க்கால்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். இதனை சரிசெய்தால் தண்ணீர் பிரச்னை ஓரளவு சரிசெய்யப்படும். இதைவிட்டு விட்டு தண்ணீருக்காக ஆந்திரா, கர்நாடகத்துடன் தமிழக முதல்வர் சண்டைபோடுவது சரியில்லை. தமிழகத்தில் உள்ள நீர்நிலைப் பகுதிகளை சரிசெய்து வைத்திருந்தாலே வறட்சி காலங்களில் தண்ணீரை சேமித்து அதனை பயன்படுத்த முடியும். எனவே தமிழகத்தில் உள்ள நீர்நிலைப்பகுதி ஆக்கிரமிப்புகளை முற்றிலும் அகற்றிட நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாயிகளுக்கு தரமான விதைகளை வழங்க வேண்டும். நதிநீர் இணைப்புத் திட்டத்திற்கு வாஜ்பாய் பிரதமராக இருக்கும்போதே ரூ.5.60 கோடி நிதிஒதுக்கீடு செய்தார். கங்கை நீரை நேரடியாக காவிரியில் இணைக்க முடியாது. அதனை இணைக்க நிலஎடுப்பு செய்ய வேண்டும். கால்வாய்கள் புதிதாக அமைக்க வேண்டும். அதற்கும் மேலாக அந்தந்த மாநில அரசுகளின் ஒத்துழைப்பு கண்டிப்பாக தேவை. என்றார்.

## <u>கலெக்டர் தகவல் 22ம் தேதி விவசாயிகள் குறை தீர்வு கூட்டம்</u>

திருவண்ணாமலை, :திருவண்ணாமலை கலெக்டர் அலுவலகத்தில் ஒவ்வொரு மாதமும் மூன்றாவது வெள்ளிக்கிழமை மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்வு கூட்டம் நடைபெற்று வருகிறது. அதன்படி ஆகஸ்ட் மாதத்திற்கான விவசாயிகள் குறை தீர்வு நாள் கூட்டம் வருகிற 22ம் தேதி காலை 10 மணியளவில் கலெக்டர் ஞானசேகரன் தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள அனைத்து துறை அலுவலர்களும் கலந்து கொண்டு விவசாயிகளின் குறைகள் மற்றும் கோரிக்கைகளுக்கு பதில் அளிக்க உள்ளனர். எனவே விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் பொது கோரிக்கைகள் இருப்பின் அதன்விவரம் குறித்த மனுக்களை வருகிற 10ம் தேதிக்குள் (ஞாயிற்றுக்கிழமை) திருவண்ணாமலை கலெக்ட ருக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டு கொள்ளப்படுகிறார்கள். அதே போல கலெக்டர் அலுவலகம், தாசில்தார் அலுவலகம் மற்றும் வேளாண்மை துறை அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ள மானிய விண்ணப்ப பெட்டிகளிலும் மனுக்களை போடலாம். இந்த தகவலை கலெக்டர் ஞானசேகரன் தெரிவித்துள்ளார்.

**<u>காய்கறி பயிரில் அதிக மகசூல் பெற குழித்தட்டு நாற்றங்கால் தோட்டக்கலை அதிகாரி யோசனை</u>**

தோகைமலை, . காய்கறி பயிர்களில் அதிக மகசூல் பெறுவதற்கு உயர் தொழில்நுட்ப முறையான குழித்தட்டு நாற்றங்கால் முறையில் நாற்றுவிட்டு நடவு செய்ய வேண்டும் என விவசாயிகளுக்கு தோ ட்டக்கலை அதிகாரி யோ சனை தெரிவித்துள்ளார். இதுகுறித்து தோகைமலை தோட்டக்கலை உதவி இயக்குனர் ராஜேந்திரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கரூர் மாவட்டம், தோகைமலை பகுதி விவசாயிகள் காய்கறி பயிர்களில் அதிக மகசூல் பெறுவதற்கு குழித்தட்டு நாற்றங்கால் முறையை பயன்படுத்தலாம். இதற்காக சந்தையில் பல தடிமன் அளவுள்ள குழித்தட்டுகள் கிடைக்கின்றன. காய்கறி பயிர்களுக்கு 0.8 மிமீ தடிமன் கொண்ட 98 குழிகள் உள்ள குழித்தட்டுகள் ஏற்றது. இந்த குழித்தட்டுக்களில் அதிகப்படியான நீர்வழிந்து செல்ல ஏதுவாக அடியில் 2 துவாரங்கள் இருக்கும். இந்த தட்டுக்களை எளிதாக மடக்கி எடுத்துச் செல்லமுடியும். நாற்றுக்களை வளர்க்க நன்கு பதப்படுத்தப்பட்ட தென்னை நார்க்கழிவினை வளர்ச்சி ஊடகமாகப் பயன்படுத்தலாம். தென் னை நார்க்கழிவு விலை மலிவாகவும், நாற்று உற்பத்தி க்கு ஏற்றதாகவும் உள்ளது. குழித்தட்டு நாற்றங்கால் மூலம் காய்கறி பயிர்கள் மற்றும் அனைத்து நாற்றுவிட்டு நடவு செய்யும் பயிர்களையும் உற்பத்தி செய்யலாம். நாற்று விடும் முறை: குழித்தட்டுகளில் நன்கு பதப்படுத்தப்பட்ட போதுமான தென்னை நார்க்கழிவினை நிரப்பி 12 செமீ ஆழத்தில் குழி உருவாக்கி விதைகளை குழிக்கு ஒரு விதை என்ற அளவில் இட்டு மறுபடியும் நார்கழிவு மூலம் விதைகளை மூடி பின்னர் குழித்தட்டுகளை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி வெளிச்சம் உட்புகாதவாறு பாலித்தீன் தாள் கொண்டு ஐந்து நாட்களுக்கு மூடிவைக்க வேண்டும். ஐந்தாம் நாள் வதை முளை வெளிவர ஆரம்பிக்கும் சமயம் இந்த தட்டுக்களை நிழல் வலை நாற்றங்காலில் அடுக்கி வைக்க வேண்டும். தினமும் காலை, மாலை இரு வேளைகளிலும் பூவாளி கொண்டு நீர் தெளிக்க வேண்டும். நாற்றின் வயது குழித்தட்டு முறையில் உற்பத்தி செய்த தக்காளியை 25 முதல் 30 நாட்களிலும், மிளகாய், கத்திரி நாற்றுக்களை 35 முதல் 40 நாட்களிலும், வெங்காய நாற்றுக்களை 20 முதல் 25 நாட்களிலும் எடுத்து நடவு செய்யலாம்.

பயன்கள்: குழித்தட்டு முறையில் நாற்று உற்பத்தி செய்து நடவு செய்வதால் விதை அளவு குறைகிறது. பூச்சி நோய் தாக்குதல் குறைகிறது. நடவு நிலத்தில் செடிகள் மடிவது குறைகிறது. விரைந்து மகசூல் கொடுக்கிறது. அதிக வருமானம் பெறலாம் மேலும் விபரங்கள் பெற வட்டார தோட்டக்கலைத் துறை அலுவலர்களை அணுகி பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## <u>காவிரி, வைகை, குண்டாறு இணைப்பு திட்டத்தில் விராலிமலை விளை நிலங்களை பாசன பகுதிகளாக சேர்க்க வேண்டும்விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்</u>

அன்னவாசல், : காவிரி, வைகை, குண்டாறு இணைப்பு திட்டத்தில் விராலிமலை பகுதியில் உள்ள விவசாய நிலங்களை பாசனப் பகுதிகளாக சேர்க்க வேண்டும் என்று தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது. புதுக்கோட்டை மாவட் டம், அன்னவாசலில் நடைபெற்ற அச்சங்கத்தின் ஒன்றியக் குழுக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அன்னவாசலில் உள்ள சங்க அலுவலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத் துக்கு ஒன்றியத் தலைவர் விஜயரங்கன் தலைமை வகித்தார். திருச்சியில் 16ம் தேதி துவங்கி 3 நாட்கள் நடைபெற உள்ள மாநில மாநாடு குறித்து இந்திய கம்யூனிஸ்ட் மாவட்டச் செயலாளர் மாதவன் பேசினார். இந்திய கம்யூனிஸ்ட் மாநிலக் குழு உறுப்பினர் தர்மராஜன், சங்கத்தின் மாவட்ட கவுரவத் தலைவர் அழகர்சாமி, மாவட்டத் தலைவர் சோமையா உள்ளிட்டோர் வாழ்த்திப் பேசினர். தீர்மானங்கள்: விராலிமலை தொகுதிக்கு உட்பட்ட இலுப்பூர் தாலுகா பகுதி வானம் பார்த்த பூமியாக தொடர்ந்து வறட்சியால் பாதிக்கப்பட்டு வருகிறது. பெரும் பகுதி விளை நிலங்கள் தரிசாகக் கிடக்கும் அவல நிலை தொடர்ந்து நீடிக்கிறது. இதற்கு உரிய தீர்வு காணும் வகையில், காவிரி, வைகை, குண்டாறு இணைப்புத் திட்டத்தில் விராலிமலை தொகுதிக்கு உட்பட்ட அனைத்து விளைநிலங்களையும் பாசனப் பகுதிகளாகச் சேர்க்க வேண்டும். குளத்தூர் தாலுகா, நார்த்தாமலை குறுவட்டத்தை வேறு தாலுகாவில் இணைக்கும் முயற்சியை கைவிட வேண்டும். அன்னவாசல் ஒன்றியப் பகுதிகளில் கடும் வறட்சியிலும் பயிரிடப்பட்டுள்ள பயிர் களை குரங்குகள்,

மயில்களின் பிடியில் இருந்து பாதுகாத்திட அவற்றை பிடித்து காப்பகங்களில் கொண்டுவிட வேண்டும். இலுப்பூர் தாலுகா பகுதிகளில் உள்ள பாசன கண்மாய், ஏரி மற்றும் குளங்களை தூர்வார வேண்டும். திருச்சியில் நடைபெறும் மாநில மாநாட்டுக்கு அன்னவாசலில் இருந்து தியாகி ரங்கசாமி நினைவுச் சுடரை தொடர் ஓட்டமாக எடுத்துச்செல்ல வேண்டும் என்பன உள்ளிட்ட பல் வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில், ஒன்றியக் குழு உறுப்பினர்கள் ராமன் ஆறுமுகம் நாகராஜ், சோலை, கருப்பையா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். முன்னதாக, ஒன்றியச் செயலாளர் கணேசன் வரவேற்றார்.

## <u>சீர்காழி வங்கியில் விவசாய கடன் வழங்கும் விழா</u>

சீர்காழி,: சீர்காழி பஞ்சாப் நேஷனல் வங்கியில் விவசாயிகளுக்கு வங்கிக்கடன் வழங்கும் விழா நடைபெற்றது. சீர்காழி வங்கி மேலாளர் சேகர் தலைமை வகித்தார்.நாகப்பட்டினம் வங்கி மேலாளர் சரவேஸ்வரன் முன்னிலை வகித்தார். புத்தூர் கிளை மேலாளர் தினேஷ் வரவேற்றார். வங்கியில் 100க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு விவசாய கடன் வழங்கப்பட்டது. இதில் மகளிர் சுய உதவிக்குழுக்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர். மேலாளர் விகிதா நன்றி கூறினார்.

## <u>நுண்ணீர் பாசனம் அமைக்க 80 சதவீதம் அரசு மானியத்துடன் சூரிய சக்தி பம்புசெட்</u>

நாகர்கோவில்,: நாகர்கோவில் வேளாண்மை இணை இயக்குநர் (பொறுப்பு) பொன்காத்த பெருமாள் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: குமரி மாவட்டத்தில் தென்னை மரங்களுக்கு பெரும்பாலான விவசாயிகள் வாய்க்கால் அமைத்து நீர் பாய்ச்சி வருகின்றனர். இதனால் பெரும்பாலான நிலத்தடி நீர் வீணாவதோடு அதிக செலவும் ஆகிறது. நீரினை சிக்கனமாக பயன்படுத்தி அதிக லாபம் பெற நுண்ணீர் பாசனம் அமைத் தல் மிகவும் அவசியமானதாகும். நுண்ணீர் பாசனத் தில் சொட்டுநீர் பாசனம், தெளிப்பு நீர் பாசனம் ஆகிய இரு முறைகள் உள்ளன. மின்தட்டுப்பாடு உள்ள நேரங்களிலும், மின் இணைப்பு பெற முடியாத நிலையிலும் உள்ள விவசாயிகளும் நீர்பாசனம் செய்ய முடியாமல் சிரமப்படுகின்றனர். இந்த பிரச்சனைகளை தடுக்க சூரிய சக்தியால் இயங்கும் பம்பு

செட் அமைத்தல் அவசியமாகும். இதற்காக தமிழக அரசு வேளாண்மைத் துறையின் மூலம் 5 குதிரை திறன் கொண்ட ஏ.சி மோட்டார் பம்பு செட்டுகள், தானியங்கி சாய்மான வசதியுடன் கூடிய குழாய் பம்புசெட்டுகள், திறந்த கிணறு பம்புசெட்டுகள், தரை மேல் பொருத்தப்படும் பம்புசெட்டுகள், அமைக்க 80 சதவீதம் மானியம் வழங்க திட்டமிட்டுள்ளது. ஏற்கனவே நுண்ணீர் பாசன இணைப்பு வைத் துள்ள விவசாயிகள், நேரடியாக சூரிய சக்தி பம்பு அமைக்க விண்ணப்பிக்கலாம். நுண்ணீர் பாசன இணைப்பு இல்லாத விவசாயிகளிடம் தனியாக நுண்ணீர் பாசனத்துக்கான விண்ணப்பம் பெறப்பட்டு நுண்ணீர் பாசனம் அமைத்தலுக்கான திட்ட வழிமுறைகளின்படி நுண்ணீர் பாசன இணைப்பு பெற வேண்டும். இந்த அரசு மானியம், முதலில் வரும் விவசாயிகளுக்கே முன்னுரிமை அடிப்படையில் வழங்கப் படும், என்பதால் தேவைப் படும் விவசாயிகள் உடனடி யாக வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகங்களை தொடர்பு கொள் ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## <u>சாமந்தி பூ சாகுபடி விவசாயிகள் தீவிரம்</u>

காட்டுமன்னார்கோவில், :காட்டுமன்னார்கோவிலில் உள்ள விவசாயிகள் மலர் சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர். அனைத்து விசேஷங்களுக்கும் மலர்கள் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. இதனால் மலர்களின் தேவைகள் அதிகரித்துள்ளது. நாளுக்கு நாள் மலர்களின் விலை அதிகரித்து வருகிறது. இதை கருத்தில் கொண்டு இப்பகுதி விவசாயிகள் பல்வேறு மலர் சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர். அனைத்து விளை நிலங்களிலும் தற்போது மலர் சாகுபடி செய்யப்படுகிறது. சாமந்தி பூ சாகுபடியை விவசாயிகள் செய்து வருகின்றனர். சாமந்தி பூவில் கோ-1, 2, எம்டியூ-1 என ரகங்கள் உள்ளது. ஜூன், ஜூலை மாதங்களில் நடவு செய்யப்படுகிறது. நல்ல வடிகால் வசதி உடைய மண் கலந்த செம்மண் நிலத்தில் பயிரிடப்படுகிறது. 30 செ.மீ இடைவெளியில் நாற்றுகள் நடவு செய்யப்படுகிறது. வாரம் ஒரு முறை நீர் பாய்ச்சப்படுகிறது. தேவையான அளவு

தொழு உரம் இடப்பட்டு அதிக மகசூல் இந்த பகுதியில் பெறப்படுகிறது. அதிக விலையும் கிடைப்பதால் அதிகம் பேர் சாகுபடி செய்கின்றனர்.

## ரூ400 கோடியில் கதவணை 15 ஆயிரம் ஏக்கர் சாகுபடிக்கு பயன்

சிதம்பரம், : கொள்ளி டம் ஆற்றில் ரூ.400 கோடி யில் கதவணை கட்டப்படும் என சட்டப் பேரவையில் நேற்று அறிவித்த தமிழக முதல்வருக்கு சிதம்பரம் சட்டமன்ற உறுப்பினர் பால கிருஷ்ணன் நன்றி தெரிவித்து கடிதம் அனுப்பியுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது: கொள்ளிடம் ஆற்றில் கடலூர், நாகை மாவட்டங்களை சேர்ந்த ஆதனூர் - குமாரமங்கலம் இடையே ரூ.400 கோடி மதிப்பீட்டில் கதவணை கட்டி கொள் ளிடம் ஆற்றின் வடிநீரை பாசனத்திற்கும், குடிநீருக்கும் பயன்படும் வகையில் திருப்பி விடும் திட்டத்தினை சட்டப்பேரவையில் அறிவித்த முதல்வருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். கொள்ளிடம் ஆற்றின் குறுக் கே அணை கட்டி அதனை பாசனத்திற்கு திருப்பிவிட வேண்டும் என்பது இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாகும். இத்திட்டத்தினை நிறைவேற்ற வற்புறுத்தி தொடர்ந்து சட்டமன்றத்தில் கோரிக்கை எழுப்பியுள்ளேன். கடந்த ஜூலை 2ம் தேதி எனது தலை மையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் 25 கி.மீட்டர் தூரம் நடைபயணம் நடத்தப்பட்டு தங்களுக்கு மனுக்கள் அனுப்பப்பட்டுள்ளன. இதனால் இத்திட்டத்தின் மூலம் சிதம்பரம், கிள்ளை பகுதிகளில் சுமார் 15 ஆயிரம் ஏக்கர் கோடை கால சாகுபடிக்கு பயன் ஏற்படும். நிலத்தடி நீர் உயர்வதற்கும், கடல் நீர் உட்புகுந்து நிலத்தடி நீர் உவர் நீராக தடுப்பதற்கும் பயன்படும். கோடைக்காலத்தில் குடிநீர் பஞ்சத்தை போக்க இத்திட்டம் பேருதவியாக அமையும்.

## செட்டிக்குளம் வணிக வளாகத்தில் 4,178 கிலோ சின்னவெங்காயம் திறந்த முறை ஏலத்தில் விற்பனை

பெரம்பலூர், : செட்டிக்குளம் வெங்காய வணிக வளாகத்தில் நடைபெற்ற திறந்தமுறை ஏலத்தில் 4,178 கிலோ சின்ன வெங்காயம் விற்பனை செய்யப்பட்டது என கலெக்டர் தரேஸ்அகமது தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர்

வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு : பெரம்பலூர் மாவட்டம், செட்டிக்குளத்தில் திங்கட்கிழமை நடைபெற்ற சின்ன வெங்காய ஏலத்தில் மாவட்டத்தைச் சேர்ந்த 26 விவசாயிகள் தங்களது 72 மூட்டைகளில் அதாவது 4,718 கிலோ சின்ன வெங்காயத்தை கொண்டு வந்து விற்பனை செய்தனர். இதில் கிலோ ஒன்றுக்கு அதிக பட்சமாக ரூ.20ம், சராசரியாக ரூ15.70 வரை விலை கிடைத்தது. இதன் மூலம் ரூ74,000 க்கு சின்னவெங்காயம் விற்பனை நடைபெற்றது. நாளை (7ம்தேதி) செட்டிகுளம் வணிகவளாகத்தில் ஏலம் நடை பெறவுள்ளது. விவசாயிகள் தங்களது வெங்காயத்தை காலை 11 மணிக்குள்ளாக வணிக வளாகத்திற்கு கொண் டுவர கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். காலை 11.30 மணியளவில் திறந்த முறை ஏலம் நடத்தப்படும். எனவே விவசாயிகள் சின்னவெங்காயத்தை பெருமளவில் கொண்டுவந்து நல்ல விலைக்கு விற்பனை செய்து பயன்பெறலாம் எனத் தெரி வித்துள்ளார்.

## <u>குரும்பலூர் பகுதியில் பூசணிக்காய் சாகுபடி</u>

பெரம்பலூர், : ஆயுதபூஜையை முன்னிட்டு ஆடியில் பூசணிக்காய் சாகுபடி துவங்கப்பட்டுள்ளது. அக்டோடர் மாதங்களில் கொண்டாடப்படும் ஆயுத பூஜையில் பூசணிக்காயின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். ஆலைகளிலும், வர்த்தக நிறுவனங்களிலும், கடைகளிலும் ஆயுத பூஜைக்கு பூசணிக்காய்களையே அதிகம் பயன்படுத்துகின்றனர். இதனைக் கணக்கில் கொண்டு குரும்பலூர் பகுதியில் ஆடிமாதத்திலேயே பூசணிக்காய் சாகுபடி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது அக்டோபரில் பலன் தரும் வகையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. வெங்காய சாகுபடிக்கு தேவைப்படும் தண்ணீர் இதற்குத் தேவைப்படாது என்பதாலும், அறுவடை செய்த அன்றே கை மேல் காசு பார்க்கும் வாய்ப்புள்ளதால் இப்பகுதியில் பலரும் பூசணிக்காய் சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர். குரும்பலூர்-ஈச்சம்பட்டி இடையே விவசாயி பச்சைமுத்து என்பவரது வயலில் 2 ஏக்கர் பரப்பளவில் பூசணிக்காய் சாகுபடி செய்யப்படுகிறது. இதற்காக பாத்திகட்டி தண்ணீர் பாய்ச்சி பூசணிக்காய் பராமரிக்கப்பட்டு வருகிறது. அக்டோபரில் அறுவடை செய்து விற்பனைக்கு வரவுள்ளது.

**களரம்பட்டியில் காய்கறி சாகுபடிக்கு உயர் தொழில்நுட்ப பயிற்சி**

பெரம்பலூர், : களரம்பட்டியில் தோட்டக்கலைத்துறை சார்பாக காய்கறி மற்றும் சின்னவெங்காய சாகுபடி குறித்த உயர் தொழில்நுட்பப்பயிற்சி நடைபெற்றது. பெரம்பலூர் மாவட்டம், களரம்பட்டி கிராமத்தில் தோட்டக்கலை துறை சார்பாக காய்கறிகள் மற்றும் சின்னவெங்காயம் குறித்த உயர்தொழில்நுட்ப, நவீன சாகுபடிக்கான பயிற்சி முகாம் நேற்று நடைபெற்றது. பெரம்பலூர் மாவட்டத்தில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் சார்பாக ஒரு எக்டேரில் ஒரு லட்சம் பெருக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வரு கிறது. இத்திட்டத்தின்கீழ் 2014-15ம்ஆண்டிற்கு மாவட்டஅளவில் 4ஆயிரம் எக்டேரில் காய்கறிகள் சாகுபடி செய்திடவும், 2ஆயிரம் எக்டேரில் சின்னவெங்காயம் சாகுபடி செய்திடவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன் பேரில் அனைத்து வட்டாரங்களிலும் உள்ள விவசாயிகளுக்கு சின்னவெங்காயம் மற்றும் காய்கறி சாகுபடி குறித்தப் பயிற்சி அளித்திட திட்டமிடப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. களரம்பட்டி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற பயிற்சி முகாமினை மாவட்ட தோட்டக்கலைத்துறை துணைஇயக்குநர் (பொ)இந்திரா துவக்கி வைத்து பேசினார். தொடர்ந்து வாலிகண்டபுரம் வேளாண் அறிவியல் மையத்தின் தோட்டக்கலை தொழில்நுட்ப வல்லுநர் கதிரவன் பேசுகையில், தோட்டக்கலைப் பயிர்களான காய்கறிகள் சாகுபடி செய்வதன் மூலம் விவசாயிகளுக்கு தொடர்ந்து வருமானம் கிடைக்கும் வாய்ப்புள்ளது. இதற்காக மண் பரிசோதனை செய்து மண்ணிலுள்ள சத்துக்கள் அடிப்படையில் சாகுபடி செய்யப்படும் பயிருக்கு ஏற்ற உரங்களை உரிய அளவில் இடுதல், விதைநேர்த்தி, வீரிய ரககாய்கறிகள் சாகுபடியில், குழித்தட்டு முறையில் திரட்சியான நாற்றுகள் தயாரித்தல், சொட்டுநீர் பாசனம் அமைத்து காய்கறிகள் சாகுபடி மேற்கொள்வதன் மூலம் இருப்பில் உள்ளநீரை சிக்கனமாகப் பயன்படுத்தி அதிக பரப்பளவில் சாகுபடி மேற்கொள்ளுதல், நீர்வழி உரமிடுதல் மூலம் உரச்செலவை குறைத்து உரங்கள் வீணாவதை தவிர்த்தல் மற்றும் களைக் கட்டுப்பாடு குறித்து விளக்கிக் கூறினார். பயிற்சியில் பெரம்பலூர் தோட்டக்கலை உதவிஇயக்குநர்(பொ) ஆனந்தன்,

தோட்டக்கலை உதவிஅலுவலர்கள் மகேஸ்வரி, நாகராஜ், கனகராஜ், பாலசுப்ரமணியன், மகேஸ்வரி உள்ளிட்ட அலுவலர்கள், 100க்கும் மேற்பட்ட விவசாயிகளும் கலந்து கொண்டனர். பங்கேற்ற விவசாயிகளுக்குப் பயிற்சிக் கையேடுகள் வழங்கப்பட்டன.

## வேளாண் விளைபொருட்களுக்கான வரி விலக்கு தொடர வேண்டும்

ஈரோடு, : ஈரோடு மாவட்ட அனைத்து தொழில் வணிக சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவர் சிவநேசன், பொதுச்செயலாளர் ராஜமாணிக்கம், பொருளாளர் குமாரசாமி ஆகியோர் மத்திய நிதியமைச்சர் அருண் ஜெட்லிக்கு கோரிக்கை மனு ஒன்றை அனுப்பியுள்ளனர். அந்த மனுவில், தற்போது சமர்ப்பித்த நிதிநிலையில் ஜி.எஸ்.டி. எனப்படும் பொருள் மற்றும் சேவை வரி சட்டத்தை வரும் நிதியாண்டு 1.4.2015 முதல் அமல்படுத்தப்படும் என்று அறிகிறோம். இந்த சட்டத்தை அனைத்து மாநிலங்களிலும் அமல்படுத்த வேண்டுமென்றால் சில எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற வேண்டும்.மத்திய சரக்குகள் மற்றும் சேவை வரி ஒரு பிரிவாகவும், மாநில சரக்குகள் மற்றும் சேவை வரி மாநிலங்களுக்கு இடையில் ஒரு பிரிவாகவும் செயல்பட வேண்டும். இதற்கான முழுமையான வரைவு அறிக்கையை மத்திய அரசு விரைவில் வெளியிட வேண்டும். அனைத்து தொழில் சார்ந்த வர்த்தக அமைப்புகளுடன் நாடு தழுவிய விவாதம் நடத்தி முடிவு பெற வேண்டும். விலக்கு அளிக்கப்படும் பொருட்களின் பட்டியல் அகில இந்திய அளவில் ஒரே மாதிரி இருக்க வேண்டும். மத்திய, மாநில ஜி.எஸ்.டி. வரி விகிதம் எக்காரணம் கொண்டும் தற்போது உள்ள 12.5 சதவீதத்தை விட அதிகமாக இருக்க கூடாது. தற்போது நடைமுறையில் உள்ள வாட் வரிவிலக்கான 10 லட்சம் ரூபாய் மற்றும் சேவை வரி விலக்கான 10 லட்சம் ரூபாய் என்பது சிறு, குறு வணிகர்கள் நலன் கருதி தொடர வேண்டும். 50 லட்சம் ரூபாய் வரை வணிகம் செய்யும் சிறு வணிகர்கள் தற்போது உள்ள நடைமுறைப்படி 0.5 சதவீதம் மட்டும் செலுத்தி வணிகம் செய்திட அனுமதிக்க வேண்டும். வரிவசூல் முறை அகில இந்திய அளவில் ஒரே மாதிரி அமைய வேண்டும். மாநில எல்லையில் உள்ள சோதனை சாவடி தவிர இதர சாவடி அனைத்தும் நீக்க வேண்டும். சிறப்பு பொருளாதார மண்டலங்கள்,

வேளாண் விளை பொருட்கள் மீதான வரிவிலக்கு தொடர வேண்டும். மத்திய, மாநில அரசுகள் எந்த ஒரு பொருளுக்கும் தன்னிச்சையாக வரி விலக்கு செய்வது தடுக்கப்பட வேண்டும். மதுபான பொருட்கள், சிகரெட், புகையிலை, போதை பாக்குகள், பான்மசாலாக்கள் மீது உள்ள அதிகபட்ச வரிவிதிப்பு தொடர வேண்டும். மாநிலங்களில் தற்சமயம் உள்ள வரி வருவாய் குறையாமல் இருக்க மத்திய அரசு உதவ வேண்டும். அலுவலர்கள், வணிகர்கள், தொழில் முனைவோர்களுக்கு பயிற்சி வழங்க வேண்டும் என்று அதில் தெரிவித்துள்ளனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>கே.ஆர்.எஸ். அணை நிரம்பியதால் காவிரி நீர் பிரச்சினை ஏற்படாது முதல்–மந்திரி சித்தராமையா பேச்சு</u>**

மைசூர், கே.ஆர்.எஸ். அணை நிரம்பியதால் இந்த ஆண்டு காவிரி நீர் பிரச்சினை ஏற்படாதுஎன்றுமுதல்–மந்திரிசித்தராமையாகூறினார்.

**அணைநிரம்பியது**

கர்நாடகத்தில் உள்ள முக்கிய அணைகளில் ஒன்று மண்டியா மாவட்டத்தில் உள்ள கே.ஆர்.எஸ். அணை. இந்த அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த சில வாரங்களாக தென்மேற்கு பருவமழை கொட்டி வருகிறது. இதனால் அணைக்கு தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்து வந்தது. இதையடுத்து, அணை தனது முழு கொள்ளளவான124அடியைநேற்றுஎட்டியது.

**சமர்ப்பணபூஜை**

இதைத்தொடர்ந்து, அணையில் சிறப்பு பூஜை நேற்று மாலை 3.45 மணியளவில் நடந்தது. இதில், முதல்–மந்திரி சித்தராமையா கலந்து கொண்டு, சிறப்பு பூஜையை

செய்தார். முறத்தில் நவதானியங்கள், வஸ்திரம், சந்தனம், மஞ்சள், குங்குமம், பூ, தேங்காய், பழம் ஆகிய மங்கல பொருட்களை வைத்து இன்னொரு முறத்தால் அதை மூடி கட்டி, மொத்தம் அதுபோன்று 20 கட்டுகளை கட்டி அணையில் சமர்ப்பித்து(போட்டு)சமர்ப்பணபூஜைசெய்தார். ‘நல்ல மழை பெய்து அணை நிரம்பட்டும், பயிர் செழித்து விவசாயிகள், மக்கள் அனைவரும் மகிழ்ச்சியாக வாழட்டும்’ என்ற ஐதீகத்தில் இந்த சிறப்பு பூஜை செலுத்தும் முறை பழங்காலத்தில் இருந்தே கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அந்த நம்பிக்கையில் அணையில் நேற்று சமர்ப்பண பூஜை நடைபெற்றது. இதைத்தொடர்ந்து, அணையில் உள்ள காவிரி மாதாசிலைக்கும்சித்தராமையாபூஜைசெய்தார்.பின்னர் அங்கு நடந்த நிகழ்ச்சியில் சித்தராமையா பேசியதாவது:– **ரூ.65ஆயிரம்கோடி** “கர்நாடகத்தில் நீர்ப்பாசன மேம்பாட்டுக்காக ஒவ்வொரு ஆண்டும் ரூ.13 ஆயிரம் கோடி வீதம் 5 ஆண்டுகளுக்கு ரூ.65 ஆயிரம் கோடி ஒதுக்கப்படுகிறது. இதில் பெரிய நீர்ப்பாசன திட்டங்களுக்கு ரூ.10 ஆயிரம் கோடியும், சிறிய நீர்ப்பாசன திட்டங்களுக்கு ரூ.3 ஆயிரம் கோடியும் செலவு செய்யப்படுகிறது. இதுதவிர கால்வாய்கள், ஏரிகள், குளங்களை புனரமைத்து, குடிநீர் மற்றும் விவசாயத்துக்கு தேவையான நீர் அனைவருக்கும் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இந்த ஆண்டு ஜூன் மாதத்தில் மழை சரிவர பெய்யவில்லை. இதனால் மக்கள் வருத்தம் அடைந்தனர். இந்த ஆண்டு கே.ஆர்.எஸ். அணை நிரம்புமா? பூஜை செய்ய முடியுமா? என்று எனது மனதிலும் கேள்வி எழுந்தது. மழை சரிவர செய்யாததால் கவலையில் இருந்தேன். ஆனால், ஜூலை மாதம் 10–ந் தேதிக்கு மழை பெய்ய தொடங்கி, அனைத்து அணைகளும் படிப்படியாக நிரம்பி உள்ளன.

**பிரச்சினைஏற்படாது**

இதனால், இந்த ஆண்டு விவசாயிகளுக்கு தண்ணீர் பிரச்சினை ஏற்படாது. மேலும் தமிழகத்துக்கும், நமக்கும் இடையே காவிரி நீர் பிரச்சினை ஏற்படாது. கடந்த ஆண்டு காவிரி நடுவர் மன்ற உத்தரவுப்படி, தமிழகத்துக்கு வழங்க வேண்டிய

தண்ணீரை காட்டிலும் கூடுதலாக 68 டி.எம்.சி. தண்ணீர் வழங்கப்பட்டது. இந்த ஆண்டும் பிரச்சினை ஏற்படாது. அணை நிரம்பி உள்ளதால் உபரிநீர் தமிழகத்துக்கு திறந்து விடப்படுகிறது. விவசாய பணிகளுக்காக கால்வாய்களில் வினாடிக்கு 10 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது. காவிரி எப்போதும் நிரம்பி வழிந்தால், விவசாயிகளும், மக்களும் மகிழ்ச்சியாக இருப்பார்கள். எந்த பிரச்சினையும் ஏற்படாது. காவிரி நிரம்பி வழியவில்லை என்றால், விவசாயிகளுக்கும் பிரச்சினை, மக்களுக்கும் பிரச்சினை, இரு மாநிலங்களுக்கும் பிரச்சினை. அதுபோன்று ஆகக்கூடாது. எப்போதும், இதுபோன்று காவிரி நிரம்பி வழியட்டும். மக்கள் மகிழ்ச்சியாக வாழட்டும். இதற்காக காவிரி தாயை வணங்கி வேண்டுகிறேன்.

**சர்க்கரை ஆலைகளுக்கு உத்தரவு** மண்டியா மாவட்ட நீர்ப்பாசன திட்டங்களுக்கு ரூ.400 கோடி ஒதுக்கப்பட்டு உள்ளது. கரும்பு விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு அரசு அறிவித்த ரூ.150 மானிய தொகையை சர்க்கரை ஆலைகள் உடனடியாக வழங்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டு உள்ளது. அந்த பணத்தை விரைவில் வழங்காவிட்டால், சர்க்கரை ஆலைகளை மூடி அங்கு தயாரித்து வைக்கப்பட்டு உள்ள சர்க்கரையை விற்பனை செய்து, அதன்மூலம் கிடைக்கும் பணத்தை விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.மாநிலத்தில் உணவுப்பொருட்கள் உற்பத்தியை அதிகரிக்க விவசாயத்தில் நவீன தொழில்நுட்பம், யுக்திகளை விவசாயிகள் மேற்கொள்ள வேண்டும். அப்படி செய்தால் மட்டுமே உற்பத்தியை அதிகரிக்க முடியும். மேலும் விவசாயிகள் தண்ணீரை வீணாக செலவழிக்காமல், தங்களுக்கு தேவையான அளவு மட்டும் பயன்படுத்த வேண்டும்.இவ்வாறு சித்தராமையா பேசினார்.

**<u>கண்டலேறு அணையில் இருந்து திறக்கப்பட்ட கிருஷ்ணா நதிநீர் பூண்டி ஏரியை வந்தடைந்தது</u>**



ஊத்துக்கோட்டை, கண்டலேறு அணையில் இருந்து திறக்கப்பட்ட கிருஷ்ணா நதிநீர்பூண்டிஏரியைவந்தடைந்தது. நதிநீர் பங்கீட்டு திட்டம் கிருஷ்ணா நதி நீர் பங்கீட்டு திட்டத்தின்படி கடந்த 1- ந் தேதி மாலை ஆந்திர மாநிலம் நெல்லூர் அருகே உள்ள கண்டலேறு அணையில் இருந்து பூண்டி எரிக்கு திறக்கப்பட்ட தண்ணீர் நேற்று முன்தினம் காலை 6 மணிக்கு தமிழக எல்லையான ஊத்துக்கோட்டை அருகே உள்ள தாமரைகுப்பம் ஜீரோ பாயிண்ட் பகுதியை வந்தடைந்து. வினாடிக்கு 125 கனஅடி விதம் வந்து கொண்டிருந்தது. திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் வீரராகவராவ் மற்றும் பொதுப்பணித்துறை உயர் அதிகாரிகள் மலர் தூவி தண்ணீரை வரவேற்றனர். ஜீரோ பாயிண்டில் இருந்து 25 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள பூண்டி ஏரிக்கு நேற்று முன்தினம் இரவு 8 மணிக்கு தண்ணீர் சென்றடைந்தது. வினாடிக்கு 10 கனஅடி விதம் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. பூண்டி ஏரியின் உயரம் 35 அடி. இதில் 3 ஆயிரத்து 231 மில்லியன் கனஅடி தண்ணீரை சேமித்து வைக்கலாம். பூண்டி ஏரியில் சேமித்து வைக்கப்படும் கண்டலேறு தண்ணீர் மற்றும் மழை நீரை தேவைப்படும் போது புழல், சோழவரம் மற்றும் செம்பரம்பாக்கம் ஏரிகளுக்கு திறந்து விடுவது வழக்கம்.

17 அடியாக குறைந்தது

மழை பொய்த்து போனது மட்டுமில்லாமல் கண்டலேறு அணையில் இருந்து கடந்த மாதம் தண்ணீர் திறந்து விடுவது நிறுத்தப்பட்டதால் பூண்டி ஏரியில் நீர் மட்டம் 17 அடியாக குறைந்து விட்டது. ஏரியில் குறைந்த பட்சம் 18 அடி நீர் இருந்தால் மட்டுமே புழல், சோழவரம் மற்றும் செம்பரம்பாக்கம் ஏரிகளுக்கு தண்ணீர் திறந்து விட சாத்தியமாகும். கடந்த மாதம் ஏரியின் நீர் மட்டம் 17 அடிக்கு குறைந்து விட்டதால் புழல் ஏரிக்கு லிங்க் கால்வாய் மூலம் தண்ணீர் திறந்து விடுவதை

அதிகாரிகள் நிறுத்தி விட்டனர். இதனால் சென்னையில் குடிநீர் தட்டுப்பாடு அபாயம் ஏற்படும் சூழ்நிலை உருவானது. தமிழக அதிகாரிகள் கேட்டு கொண்டதன் காரணமாக கடந்த 1-ந் தேதி கண்டலேறு அணையில் இருந்து பூண்டி எரிக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. தற்போது பூண்டி ஏரிக்கு தண்ணீர் வந்து கொண்டிருப்பதால் அணையின் நீர்மட்டம் 18 அடியாக உயர்ந்த பின்னர் புழல் ஏரிக்கு தண்ணீர் திறக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

பூண்டி ஏரியில் நேற்று காலை 8 மணிக்கு 17.20 அடி நீர் மட்டம் பதிவானது. வெறும் 75 மில்லியன் அனஅடி நீர் இருப்பு உள்ளது. ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையில் 14.500 டி.எம்.சி. தண்ணீர் இருப்பு உள்ளது.

## <u>மஞ்சள்பரப்பில் இலவச மரக்கன்றுகள் வினியோகம்</u>



திண்டுககல் மாவட்டம் கன்னிவாடி வனசரக அலுவலகத்தில் வனவிரிவாக்க மையத்தில் தமிழ்நாடு பல்லுயிர் பரவல் மற்றும் பசுமையாகக பெருமர உற்பத்தி திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு சில்வர் ஒர்க் வகை மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்படுகிறது. இதற்காக கீழ்மலைப்பகுதியில் உள்ள மணலூர் கிராமம் மஞ்சள்பரப்பில் சுமார் 2 லட்சம் சில்வர் ஒர்க மரக்கன்றுகள் வளர்ககப்பட்டு வருகின்றன. பெரியூர், கே.சி.பட்டி, குப்பமாள்பட்டி, பன்றிமலை, ஆடலூர், தோணிமலை, சோலைக்காடு ஆகிய மலைக கிராமங்களில் உள்ள சிறு, குறு விவசாயிகளுககு மரக்கன்றுகள் வழங்கப்படுகிறது. மாவட்ட வனஅலுவலர் சம்பத் உத்தரவின் பேரில், மரக்கன்றுகள் வினியோகம் செய்யும் நிகழ்ச்சி மஞ்சள்பரப்பில் நடந்தது. வனச்சரகர் சுப்பையா தலைமை தாங்கினார். வனவர் ராஜு முன்னிலை வகித்தார். விவசாயிகளுக்கு மரக்கன்றுகளை வனகாப்பாளர் வேல்முருகன்

வழங்கினார். நிகழ்ச்சியில் மரக்கன்றுகள் பெற விரும்பும் விவசாயிகள் நில சிட்டா, ரேசன் கார்டு நகல் மற்றும் 2 புகைப்படம் ஆகிய ஆவணங்களுடன் கன்னிவாடி வனச்சரக அலுவலகத்தை அணுகலாம் என்று வனத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**<u>கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.2 கோடிக்கு பருத்தி ஏலம்</u>**



மல்லசமுத்திரம் சூரியகவுண்டன் பாளையத்தில் உள்ள திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க கிளையில் பருத்தி ஏலம் நடைபெற்றது. இதில் சுற்று வட்டாரத்தில் உள்ள விவசாயிகள் 6 ஆயிரம் பருத்தி மூட்டைகளை ஏலத்தின் மூலம் விற்பனை செய்வதற்காக கொண்டு வந்தனர். ஏலத்தில் முதல்ரகம் (100 கிலோ) ரூ.7 ஆயிரத்து 800 முதல், ரூ.8 ஆயிரத்து 109 வரை போனது. இரண்டாம் ரகம் ரூ.6 ஆயிரத்து 500 முதல் ரூ.7 ஆயிரம் வரை ஏலம் போனது. மொத்தம் ரூ.2 கோடிக்கு பருத்தி ஏலம் நடைபெற்றது. ஆத்தூர், கொங்கணாபுரம் மற்றும் கோவை ஆகிய பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலத்தில் கலந்து கொண்டனர்.

## விவசாய சங்க ஒன்றிய குழு கூட்டம்



இந்திய கம்யூனிஸ்டு கட்சியை சேர்ந்த தமிழ்நாடு விவசாயி கள் சங்கத்தின் ஒன்றிய குழு கூட்டம் அன்னவாசல் சங்க அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஒன்றிய தலைவர் விஜயரங்கன் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் மாதவன் கலந்து கொண்டு புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் நிலை மற்றும் திருச்சியில் வருகிற 16,17,18 ஆகிய தேதிகளில் நடைபெறும் மாநில மாநாடு தொடர்பாக பேசினார். மாவட்ட தலைவர் சோமையா 2014–ம் ஆண்டு உறுப்பினர் சேர்ப்பு சம்மந்தமாக பேசினார். பின்னர் கூட்டத்தில் குளத்தூர் தாலுகா நார்த்தாமலை பிர்காவை பிரித்து வேறு தாலுகாவில் இணைக்க முயற்சிப் பதை கைவிட்டு பொது மக்களின் போக்கு வரத்து மற்றும் இதர நலன்களை கணக்கில் கொண்டு குளத்தூர் தாலுகா விலேயே தொடர்ந்து நீடிக்க செய்ய வேண்டும். தண்ணீர் பஞ்சத்திலும் மிக அறிதாக செய்யப்படும் விவசாயத்தை குரங்குகளும், மயில்களும், அழித்து வருகிறது. அவைகளை பிடித்து காப்பகங்களில் கொண்டு விட நடவடிக்கை எடுக்க வேண்டும். இலுப்பூர் தாலுகா பகுதிகளில் உள்ள கண்மாய்கள் ஏரிகளை, குளங்களை துர்வார நடவடிக்கை எடுக்க வேண்டும்.

என்பது உள்பட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன. முன்னதாக ஒன்றிய செயலாளர் கணேசன் வரவேற்று பேசினார். இதில் ஒன்றிய குழு உறுப்பினர்கள், சங்கத்தின் மாவட்ட கவுரவத் தலைவர் அழகர்சாமி, மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## தொடர் மழை எதிரொலி: வைகை அணைக்கு நீர்வரத்து 1,000 கனஅடியாக அதிகரிப்பு நீர்மட்டம் 42 அடியாக உயர்ந்தது



தொடர் மழை காரண மாக முல்லைப்பெரியாறு அணையில் இருந்து கூடுதல் தண்ணீர் திறக் கப் பட்டதால் வைகை அணைக்கான நீர்வரத்து வினாடிக்கு 1,000 கன அடியாக அதிகரித்துள்ளது. நீர்மட்டம் 42 அடியாக உயர்ந்தது. பலத்த மழை

தென்மேற்கு பருவமழை காரணமாக முல்லைப்பெரி யாறு அணை நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த சில வாரங் களாக தொடர்ந்து பலத்த மழை பெய்து வருகிறது. நீர்வரத்து அதிகரித்துள்ளதால் முல்லைப்பெரியாறு அணை யில் இருந்து படிப்படியாக அதிகப்படியான தண்ணீர் திறக்கப்படுகிறது. இதனால் பல மாதங்களாக நீர்வரத்து இன்றி இருந்த வைகை அணைக்கு நீர்வரத்து அதி கரித்தது. தண்ணீரின் அளவு படிப்படியாக அதிகரித்து நேற்று வினாடிக்கு 1,000 கன அடியை கடந்தது. தொடர் நீர்வரத்து காரண மாக வறண்டு போகும் நிலை யில் காணப்பட்ட வைகை அணை நீர்மட்டம் சீராக உயர்ந்தது. கடந்த மாதம் 25 அடியாக காணப்பட்ட வைகை அணை நீர்மட்டம் நேற்று பிற்பகலில் 42 அடியை தாண்டியது. இந்த ஆண்டு தொடக்கத்தில் வைகை அணை நீர் இருப்பை கருத்தில் கொண்டு மதுரை மற்றும் சேடப்பட்டி கூட்டுக்குடிநீர் திட்டத்திற்கு திறக்கப்படும்

தண்ணீரின் அளவு 60 கனஅடியில் இருந்து 40 கன அடியாக குறைக்கப்பட்டது. மதுரை மாநகராட்சிக்கு 30 கனஅடி தண்ணீரும், சேடப் பட்டி கூட்டுக்குடிநீர் திட்டத் திற்கு 10 கனஅடி தண்ணீரும் பிரித்து வழங்கப்பட்டது. 1,000 கனஅடி நீர்வரத்து மதுரை, சேடப்பட்டி பகுதிகளில் முறை வைத்து 4 நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் வினியோகம் செய்யப்பட்டது. இதனால் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர். தற்போது வைகை அணை நீர்மட்டம் அதிகரித்த நிலை யில் பழையபடி வினாடிக்கு 60 கன அடி தண்ணீர் திறக்க வேண்டும் என்று பொதுமக்கள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றனர். இது குறித்து பொதுப்பணித்துறை அதிகாரி களிடம் கேட்ட போது, ‘தற்போது திறக்கப்படும் தண்ணீர் மூலம் மதுரை மாநகராட்சியில் சீராக குடிநீர் வினியோகம் செய்ய முடியவில்லை. வைகை அணை நீர்மட்டம் தற்போது அதிகரித்துள்ள நிலையில் மீண்டும் கூடுதல் தண்ணீர் திறந்துவிடுவது குறித்து உயர்மட்ட அதிகாரி கள் அளவில் ஆலோசனை நடத்தப்பட்டு வருகிறது. விரைவில் பழைய முறைப்படி கூடுதல் தண்ணீர் திறப்பதற் கான வாய்ப்புகள் அதிகம் உள்ளது’ என்றனர். நேற்று காலை நிலவரப்படி வைகை அணை நீர்மட்டம் 41.63 அடியாக காணப்பட்டது. வினாடிக்கு 1,036 கனஅடி தண்ணீர் வந்து கொண்டி ருந்தது. குடிநீர் தேவைக்காக அணையில் இருந்து வினா டிக்கு 40 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. மொத்த நீர் இருப்பு 1,084 மில்லியன் கன அடியாக உள்ளது.

முல்லைப்பெரியாறு

முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் 123.40 அடியாக காணப்பட்டது. அணைக்கு வினாடிக்கு 2 ஆயிரத்து 650 கனஅடி தண் ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து வினா டிக்கு 1,267 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. மொத்த நீர் இருப்பு 3 ஆயிரத்து 301 மில்லியன் கனஅடியாக காணப்பட்டது. நேற்று முன் தினம் நிலவரப்படி, பெரியா றில்–13.2 மி.மீ. , தேக்கடியில் 7.8 மி.மீ. மழை பெய்தது.

# வாழை சாகுபடி குறித்து செயல்முறை விளக்கம்



தேனி மாவட்டம் சின்னமனூர் அருகே உள்ள எரசக்க நாயக் கனூரை சேர்ந்த விவசாயி வெங்கட்ராமன் என்பவரது வாழை தோட்டத்தில், திருச்சி மகளிர் தோட்டக்கலை கல்லூரியில் படிக்கும் புவனா, இலக்கியா, கோமதி உள்பட 6 மாணவிகள் வாழைக்கு தேவையான நுண்ணூட்ட சத்துகளின் பயன்கள் மற்றும் செய்முறை குறித்து செயல் விளக்கம் அளித் தனர். இதில் சென் டெக்ட் வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங் கிணைப் பாளர் மாரிமுத்து உடன் இருந்து விவசாயிகளின் சந் தேகங்களுக்கு விளக்கம் அளித்தார். இதேபோல இதே கல்லூரியின் நான்காம் ஆண்டு படிக்கும் கலையரசி, வினோதா, சாந்தகுமாரி உள்பட 7 மாணவிகள் தென்னையை தாக்கும் சிவப்பு கூன் வண்டுகள் தாக்கத்தை கட்டுப்படுத்த வேர்வழி மருந்திடும் முறை குறித்து ராயப்பன்பட்டி பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு செயல்விளக்கம் அளித்தனர்.

தி இந்து

தமிழால் இணைவோம்

## இன்றைய வேளாண் செய்திகள்

### <u>பயிர்களின் துரித வளர்ச்சிக்கு உதவும் வேர் உட்பூசணம்</u>

வேர் உட்பூசணத்தின் மூலம் பயிர்களின் வளர்ச்சி துரிதமாவதோடு, மண்ணின் உயிர்த் தன்மையும் மேம்படுத்தப்படும் என ஈரோடு மாவட்ட வேளாண் அறிவியல் நிலையத்தின் உழவியல் தொழில்நுட்ப வல்லுநர் ச.சரவணக்குமார் கூறுகிறார். வேர் உட்பூசணம் என்பது வேர்களின் உள்ளே சென்று பயிர் வளர்ச்சியின் செயல்பாட்டுடன் நேரடியாக தொடர்பு கொண்டு பயிர்களுக்குத் தேவையான நீர் மற்றும் நுண்ணூட்டச் சத்துகளை (மணிச்சத்து, துத்தநாகம், தாமிரம்) எளிதாக பயிர்கள் எடுத்துக்கொள்ள உதவுகின்றன. இந்த வேர் உட்பூசணத்தை அதிக அளவில் உற்பத்தி செய்வதற்கு சோளம் அல்லது மக்காச்சோளம் போன்ற பயிர்களின் வேர்களில் வளரவிட வேண்டும்.

**பயன்படுத்தும் முறைகள்:** மண்ணில் நன்கு ஈரப்பதம் இருக்கும் பொழுது பயிர்களின் வேர்ப்பகுதிக்கு அருகில் இந்த வேர்ப்பூசணத்தை பயிர்களுக்கு 50 கிராம் வீதமும், பெரிய மரங்களுக்கு 200 கிராம் வீதமும் பயன்படுத்தலாம். ஒருசதுர மீட்டர் நாற்றங்கால் நிலப்பரப்புக்கு 100 கிராம் வேர் உட்பூசணம் போதுமானது. விதைப்பதற்கு முன் நாற்றங்காலில் மண்ணிற்கு கீழே 5 முதல் 6 செ.மீ. ஆழத்தில் இடவேண்டும்.

**சிறப்புஅம்சங்கள்:**

# வேர்களுக்கு மண்ணில் இருந்து நீரை துரிதமாக கொண்டு செல்கின்றன.
# வேர் உட்பூசணங்கள் வேரைத் தாக்கும் நோய் மற்றும் நூற்புழுக்களின் தாக்கத்தையும் கட்டுப்படுத்துகிறது.
# மணிச்சத்தின் உரச் செலவில் 25 சதவிகிதம் குறைக்கப்படுகின்றன.
# 10 முதல் 15 சதவிகித மகசூல் அதிகரிக்க உதவுகிறது.

**தொடர்புக்கு: 98653 66075.**